ISSN : 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

# புறநானூறு கூறும் நட்பின் மாண்புகள்

**ஆய்வாளர்**
**ச.இராமேஸ்வரி**
*முனைவர் பட்ட ஆய்வு மாணவர்,*
*பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி)*
*பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது.*
*திருச்சிராப்பள்ளி.*

**நெறியாளர்**
**முனைவர் ஜி.பி. முருகானந்தம்.**
*நெறியாளர் மற்றும் இணை பேராசிரியர்*
*தமிழ் ஆய்வுத்துறை பிஷப் ஹுபர் கல்லூரி (தன்னாட்சி)*
*பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது.*

**ஆய்வுச்சுருக்கம்**

*புறநானூறு என்னும் புறநூல் பண்டைத்தமிழரின் வீரம், பெருமை, கொடை, அரசியல், உயரிய கோட்பாடு போன்றவற்றை அறிந்துக்கொள்ளவும், தமிழரின் பண்பாட்டு கருவூலமாகவும் சிறந்து விளங்குகிறது. இந்நூல் புறத்திணை பற்றிப் பேசும் நானூறு பாடல்களின் தொகுப்பு எனலாம். மனிதன் வாழ்க்கையை எவ்வாறு வாழவேண்டும் என்பதை வழிவுறுத்திக்காட்டும் நூலாக உள்ளது. இந்நூல் மூவேந்தர், குறுநில மன்னர்கள், வள்ளல்கள், புலவர்கள் இவர்களின் வாழ்க்கையினை பிரதிபலிக்கின்ற நூலாக திகழ்கிறது. அதியமானுக்கும், ஔவையாருக்கும் இருந்த நட்பின் மேன்மை தனை விளக்கும் அறிய நூல். கோப்பெருஞ்சோழனுக்கும், பிசிராந்தையாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளாமலே நட்பு கொள்ளும் உயர்ந்த நட்பின் மாண்புகளை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் பொத்தியார் என்ற புலவருக்கும் கோப்பெருஞ்சோழன் எனும் மன்னருக்கும் உரிய நட்பு இங்கு அறியப்படுகிறது. மேலும் சங்ககால பேகனது நட்பின் ஆழமும் எழுத்தாளப்பட்டுள்ளன. நட்பின் சிறப்பு பற்றி சௌரா தமிழ் அகராதி நட்புக்கு பல விளக்கம் தருகிறது. நட்பு, நண்பு, சுற்றம், நண்பன், மேண்மை என்ற பொருட்களில் நட்புக்கு விளக்கம் தருகிறது. இங்கு திருக்குறள், பதிணென்கீழக்கணக்கு நூல்கள், நான்மணிக்கடிகை, ஆத்திச்சூடி, புறுநானூறு, இனியவை நாற்பது, முதுமொழிக்காஞ்சி, உலகநீதி, பாரதியின் கண்ணன் பாட்டு என பலவற்றிலும் இருந்து நட்பின் மாண்புகள் பற்றியும் ஆய்வுக்கு எடுத்;தாலப்பட்டள்ளது. இவ்வாய்வுக்கு எடுத்தாளப்பட்ட புறநானூறு உளவியல் சார்ந்த*

ஆய்வுமுறைகளையும் வரலாற்று ஆய்வுமுறைகளையும், விளக்க முறையின் மூலமாகவும் அறிந்து இவ்வாய்வு முறை விளக்கப்படுகிறது.

**முன்னுரை**

மனிதர்களையும், சமுதாயத்தையும் வரலாற்றுக் கண்கொண்டு நோக்கும் பொழுது நல்லவை நிலைப்பதும் அல்லவை அழிவதும் தவிர்க்க முடியாத நியதி என்பதை புரிந்து கொள்கிறோம். எதையும் சீர்தூக்கி நோக்கும் போது குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் எது அதிகமாக உள்ளதோ அந்த வகையில் நிறைவை எடுத்துரைப்பது நியாயமானது. அந்த வகையில் சங்க காலத்தை பொற்காலம் என்று சொல்லுமளவிற்குக் குறைகளை விட நிறைகள் அதிகமாக உள்ளன. இயற்கை வளம், சமுதாய வளம், அரசியல் வளமும், இலக்கிய வளமும் நிறைவாக அமைந்திருந்த இலக்கிய வளம் என்று கூற வேண்டுமானால் வாழ்வின் இரு கூறுகளாக அகம், புறம் பற்றிய மனித நெறிகளை எடுத்துரைத்துள்ளது போற்றுதற்குறியதாகும். அந்த வகையில் மனித உறவுகளின் அடித்தளமாக அமைகின்ற நட்பின் தன்மையையும் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றில் காணப்படும் நட்பின் சிறப்புகளை பற்றிய செய்திகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மனித உறவுமுறைகளின் இரத்த தொடர்பு இன்றி முழுக்க முழுக்க மன ஒற்றுமையால் பழகும் முறையே நட்புறவு தன்னுடைய மனதில் ஏற்படும் மகிழ்ச்சியையும், துயரத்தையும் வாழ்வின் சரிபாதியான மனைவியிடம் கூட சொல்ல முடியாத நிலையில் நண்பனிடம் மட்டுமே ஒரு மனிதனால் வெளிப்படுத்த முடியும். மற்ற உறவுகள் சொல்லியும் கேட்டுக்கொள்ள மனமில்லாத ஒருவன் தன் நண்பன் சொல்ல ஏற்றுக்கொள்வான் என்பது உண்மை என்பதையே இலக்கியங்களின் மூலம் அறிகிறோம். புறநானூறு கூறும் நட்பின் மாண்புகள் என்னும் நோக்கில் எடுத்துரைப்பதே இவ்வியலின் நோக்கமாகும்.

**ஆய்வுநெறிகள்**

புறநானூறு கூறும் நட்பின் மாண்புகள் என்னும் இக்கட்டுரையில் விளக்கமுறை ஆய்வு மற்றும் வரலாற்று முறை ஆய்வு மேலும் உளவியல் முறை சார்ந்த ஆய்வு முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரலாற்று முறை ஆய்வின் மூலம் அதியமான் - ஔவையார் நட்பு, கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் நட்பின் மேன்மை இங்கு விளக்கமாக முடிவுதனை தெள்ளத்தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. நட்பின் மாண்புகளாக இராமாயணம் நூலில் நட்பின் ஆழமும், ஆத்திச்சூடி, பாரதியின் கண்ணன் பாட்டிலும் மேற்படி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. நட்பு என்பது மனசு சம்மந்தப்பட்ட ஒன்று என்பதால் நட்பு சிறப்பாக இருத்தல் வேண்டும் என்பதை உளவியல் முறை மூலமாகவும் கையாளப்படுத்தப்பட்டுள்ளது.

**கருதுகோள்**

புறநானூற்றில் நட்பின் மாண்புகள் காணப்படுகிறது. இதுவே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

**நட்பின் இலக்கணம்**

நண்பனின் சிறப்புகளை உணர்ந்து, அவரின் செயல்பாடுகளால் பல நன்மைகள் விளையும் என்று எண்ணிய ஓர் அரசன் கிடைப்பதற்கரிய நல்ல கனியைத் தான் உண்ணாமல் ஔவைக்கு கொடுக்கிறான். அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் அரசன் புலமைசான்ற ஔவையார் அதியமானின் நட்பிற்கு உரியவராக இருந்தார். அதனால் அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனியை கொடுத்தான். இதனை பெற்ற ஔவையார் அவனைப் புகழ்ந்து பாடுகின்றார்.

"நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே தொல் நிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிற்றிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின் அகத்து அடக்கிச்
சாதல் நீங்க எனக்கு ஈத்தனையே" (புறம் 91 : 6 - 11)

என்னும் பாடல் வரிகளில் நண்பனாகிய அதியமானின் அருமையான பண்பினை அழகாகப் படம் பிடித்து காட்டுகின்றார். ஒரு மனிதனுக்கு நல்ல நண்பன் வாய்க்கப்பெற்றால் அதனை போல் பாதுகாப்பு எதுவும் இல்லை. இவ்வாறு பாதுகாப்பாக அமைகின்ற நட்பினை நாம் எல்லா வகையிலும் முயன்று உருவாக்கிக் காத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஒருவரோடு ஒருவர் கொள்ளும் நட்பு எப்படி இருக்க வேண்டுமென்றால் அரண் போன்று அமைந்திருக்க வேண்டும். அதுவே நட்பின் இலக்கணமாக அமையும் என்பதை உணரச் செய்கிறார். தான் வாழ்வாங்கு வாழ்வதை விட தன் நண்பன் வாழ்வாங்கு வாழ்வது சாலச் சிறந்தது என்பதை உணர்ந்த அதியமான் ஔவைக்கு அரிய நெல்லிக்கனியை கொடுக்கிறான். இச்செயல் நட்பின் பண்புதனை சொல்வதாக அமைகிறது.

இவ்வாறு மனித வாழ்க்கைக்கு உரிய நான்கு அறங்களையும் கூறும் நூலாகிய நான்மணிக்கடிகை நட்பின் சிறப்புகளையும் கூறுகிறது.

"நா அன்றோ, நட்பு அனுக்கும்? தேற்றம் இல்பேதை
விடும் அன்றோ... (நான்மணிக்கடிகை – 81)
விளக்குகிறது.

**நட்பின் உயர்வு**

மனித உறவுகளில் வலிமை வாய்ந்த கருவி போன்றது நட்புறவு. அந்த நட்பின் உயர்வைப் புறநானூற்றுப் பாடல்கள் எடுத்துரைக்கிறது. இருமனங்கள் ஒன்றுபட்டுப் பழகும் பண்பு நிறைந்த உறவே நட்புறவு ஒருவரை ஒருவர் பார்க்காமலே மன ஒற்றுமையாய் பிசிராந்தையாரும் கோப்பெருஞ் சோழனும் நண்பர்களாக பழகுகின்றனர். அப்பொழுது தனது நண்பன் பிசிராந்தையாரின் அன்பு மிகப்பெரியது.

தமது நண்பன் என்னிடம் செல்வம் உள்ளபோது வராமல் நிற்பினும் எம் துன்பக்காலத்தில் வராமல் இருக்க மாட்டான் என்று உறுதியாக கூறுகின்றார்.

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" (குறள் - 788)

*"என் உயிர் ஓபு நனே*
*செல்வக்காலை நிற்பினு*
*அல்லற்காலை நில்லன் மன்னே" (புறம் -215)*
*என்னும் பாடல் அடிகளில் அதை வெளிப்படுத்துகிறார்.*

*கோப்பெருஞ்சோழன் வடக்கிருத்தான், தன் நண்பனாகிய பிசிராந்தையாரும் வருவார் என்று உறுதியாக நம்புகின்றான். அதனால் அவருக்கும் ஓர் இடத்தை ஒதுக்கி வையுங்கள் என்று கூறுகின்றான் சோழன். கேள்விப்பட்ட நிலையிலேயே நட்புக்கொண்டிருந்த சோழனின் கூற்றை மற்றவர்கள் நம்பவில்லை. காரணம் பலநாள் நெருங்கிப் பழகினாலும் துன்பம் வருகிற போது ஓடி ஒளியும் மனிதர்களே உலகில் அதிகம் உள்ளனர். அப்படி இருக்கப் பார்த்துப் பழகாமலே நட்பு பூண்ட சோழனும், பிசிராந்தையாரும் உள்ளத்தால் ஒன்றுபட்டுள்ளனர். அதனால் தான் நண்பனின் வருகையை உறுதிப்படுத்துகின்றான் சோழன்.*

*ஒருவரிடம் நட்புக் கொள்ளும்போது அவர் தவறே செய்த போதிலும் புறங்கூறாமல் நேரடியாக அவரிடம் பேசி தவறினைத் திருத்த முயல வேண்டும். அதுவே உண்மையான நட்பாகும் என்பதை இனியவை நாற்பது எனும் நூலின் பாடல் உணர்த்துகிறது.*

*"நாட்டாற்ப் புறங்கூறான் வாழ்தல் நனி இனிதே*
*பட்டாங்கு பேணிப் பணிந்து ஒழுகுதல் முன் இனிதே*
*முட்டு இல்பெரும் பொருள் ஆக்கியக்கால் மற்று அறு*
*தக்குழி ஈதல் இனிது. (இனியவை நாற்பது -19)*

*பொத்தியார் என்ற புலவர், கோப்பெரும் சோழனுடன் நட்பு கொண்டிருந்தார் என்பதை கீழ்வரும் பாடல் சுட்டுகின்றது.*

*"அழல் அவிர் வயங்கு இழைப் பொலிந்த மேனி*
*நிழலினும் போகா, நின் வெய்யோன் பயந்த*
*புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வா என*
*என் இவண் ஒழிந்த அன்பிலன்,*
*என்னாது இருக்குவை அவிலை*
*என் இடம் யாது" மற்று இசை வெய்யோமே (புறம் - 222)*

*தீயினால் விளங்கும் ஒளிமிக்க அணிகலன்களை அணிந்தவள், பொக்கிஷமிக்க மேனியை உடையவள். உன் நிழலினும் உன்னை விட்டு ஒருபோதும் நீங்காதவன் உள்ளம் விரும்பத்தக்க உன் மனைவி பெறும் புகழ்மிக்க உன் பிள்ளை பிறந்த பின் வா என்று கூறி என்னோடு உறவில்லாதவனே உன்னோடு இணைந்த என் நட்பை நீ கருதாது இருக்கமாட்டாய,; புகழை விரும்புவோனே நீ எனக்குக் குறித்த இடம் யாதெனில் கூறுவாயா என்று கூறி மனம் நெகிழ்ந்து பேசுகிறார் பொத்தியார்.*

*கிடைப்பதற்கரிய நெல்லிக்கனியை, தான் உண்ணாது ஔவைக்கும் கொடுத்த அதியமானின் நட்பினை ஔவையார் சொல்லச் சொல்லி வியக்குகிறார். குறைவாகக் கள் கிடைக்குமானால் அதை எங்களுக்கு தருவான். மிகுதியாகக் கள் கிடைக்கப்பெற்றால் அதனை யாம் உண்டு பாட எஞ்சிய மதுவைத் தான் விரும்பி உண்ணுவான். இரவலர் விரும்பியவற்றை எல்லாம் அள்ளிக்கொடுப்பான். நரந்தம் பூவின் மணம் கமழும்தன் கையால் புலால்நாற்றம் வீசும் எம்முடைய தலையைத் தடவுவான். இவ்வாறெல்லாம் எமக்கு ஆதரவாக இருந்த தலைவன் எவ்விடத்துள்ளானோ இனிப்பாடுவோரும் இல்லை. பாடுபவர்க்கு ஒன்றைத்தருபவரும் இல்லை என்பதே*

*"இனி பாடுநரும் இல்லை*
*பாடுநர்க்கு ஒன்று*
*ஈகுநரும் இல்லை.     (புறம் 235)*

*என்று கூறி வருந்துகின்றார்.*

*இவ்வாறு மனித நேயத்தோடு ஓர் அரசன், வேடன், குரங்கு, அரக்கன் என இவர்களை நண்பனாய் கொள்வதைக் கம்பர் அழகிய காட்சியாக்குகிறார்.*

*"குகனொடும் ஐவர் ஆனோம் முன்புபின்குன்று சூழ்வான்*
*மகனோடும் அறுவர் ஆனோம் என் உழை அன்பின் வந்த*
*அகன் அமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனோம்*
*நுந்தை "                    (வீபிடணன் அடைக்கப்படலாம் - 452)*

*வேடர்குலத்தில் பிறந்தவன் குகன், அவன் பழக்கவழக்கம் வேடர்களுக்குறியது. நடை, உடை வேறுபட்டது.*

*ஆனால் உள்ளம் உண்மையான அன்பால் நிறைந்து இருந்தது. அதுவே நட்புக்கு அடித்தனமானது. கங்கையைக் கடப்பதற்கு இராமனுடன் இருந்து உதவுகிறான் குகன். ஒரு கட்டத்தில் அவனை இராமன் பிரிய வேண்டியுள்ளது. அப்போது இருவருமே மன வருத்தம் அடைகின்றனர்.*

*வானவராகிய சுக்கிரவனை இராமன் சந்திக்கிறான். அங்கேயும் அன்புள்ளம் செயல்படுகிறது. இராமன் சுக்கீரவனை நண்பனாய் ஏற்கிறான். இராமனின் அறப்பயணத்தில் சுக்கீவன் உள்ளிட்ட வானரங்கள் உதவி செய்கின்றன. இங்கே மனிதர்களுக்கப் பாறப்பட்ட நட்பினைக் கம்பர் எடுத்துரைக்கின்றார். அதன் பிறகு வீபீடணன் நட்பாகிறான். இவ்வாறாக நட்பின் சிறப்புக்களை கம்ப இராமயணத்தின் மூலம் அறியலாம்.*

*ஒல்லையூர்க்கிழார் மகன் பெருஞ்சாத்தினிடம் நட்புக்கொண்ட கீர்த்தனார் அவன் இறந்த பின்பு மிகவும் மனம் வருந்தி பாடுகின்றார். "முல்லையே" இளைய வீரர்கள் சூடமாட்டார். வளையல் அணிந்த இருமகளிரும் மலர் பறியார். பாணன் தன் நல்லயாழின் தீண்டினால் கொடியை வளைத்துப் பூவைப் பறித்துச் சூடிக்கொள்ளமாட்டான். பாடினியும் சூடிக்கொள்ள மாட்டாள். தன்னுடைய வீரர் வெளிப்படுமாறு வீரர் பலரை எதிர்நின்று கொன்றவன். வலிய வேலையுடைய சாத்தான் அவன் இறந்த பின்பு இந்த ஒல்லையூர்*

நாட்டில் முல்லையே நீயும் பூத்தனயோ என்னும் கருத்தமைத்த கீழ்வரும் பாடல் உள்ளத்தை நெகிழ வைப்பதாக உள்ளது.

'இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கி
பாணன் சூடான், பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க்கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும், பூத்தியோ ஒல்லையூர் நாட்டே" (புறம் - 242)

ஒல்லையூர் நாட்டு வள்ளல் சாத்தன் இறந்ததால் அவ்வூர் மக்கள் வருந்தி இருக்கின்றனர். என்பதை மலர் அணியார் என்பதால் உணர்த்தினார். மக்கள் சூடாததால் முல்லை மலர்வதன் பயனின்மை உணர்த்தினார். தமது வருத்தத்தை பலவாறு புலப்படுத்துவதாக அமைகிறது. உளவியல் ஆய்வு முறையில் பெரும்பாலும் தனிமனித எண்ணம், அந்தரங்க அகத்திணைக் கருத்து உளவியலுக்கு நெருக்கமாக அமைகின்றன. நட்பு என்பது ஒருவரது தனிமனித எண்ணத்தின் செயல்பாடு என்பதால் இங்கு உளவியல் ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. (ஆய்வியல் நெறிகள் -95)

**நண்பனை வாழ வைத்தல்**

தன்னுடைய நண்பனின் புறவாழ்க்கையில் அக்கறை கொண்டு இல்வாழ்க்கையில் சிக்கல்கள் நேரிடும் போது விலகிக்கொள்ளும் நண்பர்கள் பலர் உள்ளனர். அத்தகைய நட்பு போற்றுதற்குறியது இல்லை. நண்பனின் அகவாழ்வையும் மனதில் கொண்டு தன்னுடைய நண்பனும், அவனது மனைவியும் மகிழ்ந்து வாழ வேண்டும் என்னும் சிந்தனை உடையவர்களே உண்மையான நட்பிற்குரியவர்கள் என்பதைப் பரணர் பாடல்கள் உணர்த்துகின்றன.

பேகனைப் பிரிந்து அவன் மனைவி கண்ணகி படும் துன்பத்தினை உணர்ந்த பரணர் பேகனுக்கு கருத்துரைத்தும் கண்ணகியிடம் போகச் செய்கிறார். பேகனிடம் பரணர் கூறும்போது அவர் மனம் கொள்ளுமாறு கூறுகின்றார். மெல்லிய தகைமை பொருந்திய கரிய மயில் குளிரால் நடுங்குமென்று அருள் செய்து போர்வை கொடுத்த அழியாத நற்புகழினையும் மதமுடைய யானையையும், மனம் செருக்கிய குதிரையையும் உடைய பேக யாங்கள் பசித்தும் வந்தோம் இல்லை, எம்மால் பாதுகாக்கப்படும் சுற்றமும் எம்மால் உடையேம் இல்லை. களாப்பழம் போன்ற கரிய கோடுடைய சிறிய யாழை இசை இன்பத்தை விரும்பி உறைவார் அவ்விசையின்பத்தால் தலையசைத்து கொண்டாடும்படி வாசிப்போம், அருள் செய்யோய் அறத்தைச் செய்வாயாக, இன்று இரவே இமையாகிய மணியையுடைய உயர்ந்த பொறுத்தற்கரிய நின்நினைவால் உண்டாகிய மனைவியின் நோயைத் தீர்ப்பாயாக. என்று பேகனின் மனம் ஏற்கும் வகையில் பணிந்து இறந்து கேட்பதாக கூறுகின்றார்

"...அருள் வெய்யோய் என
இதுயாம் இரந்து பரிசில் அது இருளின்
இனைமணி நெடுந்தேர் ஏறி,

*இன்னாது உறைவி அருள்படர் களைமே" (புறம் -145)*

*என்ற பாடல் வரிகள் நட்பின் மேன்மையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.*

*நட்பின் தன்மையை கீழ்வரும் பாடலில் சுட்டுகிறது.*

*ஈரம் உடைமை ஈகையின் அறிய*
*சேரா நல் நட்பு உதவியின் அறிய*
*கற்றது உடைமை சாட்சியின் அறிய (முதுமொழிக்காஞ்சி அறிவுப்பத்து)*

*நட்புக் கொள்கிற போது சந்தர்ப்பச் சூழ்நிலையால் சேர்ந்து நட்பினைக் கூடாது. மாறாக நட்புகொண்ட ஒருவருக்கு துன்பம் வருகிறபோது மனமுவந்து உதவி கொள்ளுதல் வேண்டும். அதுவே உண்மையான நட்பாகும் என்பதை இப்பாடல் அடிகள் உணர்த்துகின்றது.*

*சுந்தரர் நட்புறவில் தாழ்மை இருக்கும். கர்வம் இருக்காது பணிவு இருக்கும். போலித்தனம் இருக்காது என்பதை எடுத்துரைக்கும் வண்ணமாகவே இவ்வாறு பாடினாரோ என்று நினைக்குமாறு கீழ்வரும் பாடலடிகள் அமைந்துள்ளன.*

*"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்*
*திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்*
*இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்*
*இளையான்றன்குடிமாறன் அடியார்க்கும் அடியேன். திருத்தொணடர்த் தொகை*

*எனது பக்தியிலும் பாசத்திற்கும் மனிதர்கள் நட்புறவு கொண்டார் அமைதியும், சத்தியமும் நிறைந்த வாழ்க்கை வாழலாம் என்று அறியலாம்.*

*நாடு இழந்தனினும் நனி இன்னாது, என*
*வாள் தந்தவனே தலை எனக்கு ஈய (புறம் -165)*

*என்னும் அடிகளில் தன் நண்பனின் கொடைச்சிறப்பை எடுத்துரைத்து அவன் மேல் தான் கொண்ட ஆர்வமும் தோன்ற எடுத்துரைக்கிறார். வரலாறு என்பது சான்றாதாரங்களை கொண்ட கதை என்பர் அறிஞர். நிகழ்காலத்தில் துன்பம் இல்லாமல் எதிர்காலத்தில் இடையூறு இன்று வழிவகை செய்வது வரலாற்று முறை ஆய்வு ஆகும். புறுநானூற்றில் நட்பு அதற்கு வழிசெய்வதால் இங்கு வரலாற்று ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. (ஆய்வியல் நெறிகள் - 46)*

***நட்பின் சிறப்பு***

*நல்ல நண்பர்களைப் பெற்றவர்கள் பண்புள்ளவர்களாக வாழ்வது நிச்சயம்.*

*"நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்*
*மேற்சென்றி டித்தல் பொருட்டு" (குறள் -184)*

*என்னும் வள்ளுவன் வாக்குப்படி துன்பத்தில் துணை நின்று நண்பனை நல்வழிப்படுத்துபவனே சிறந்த நண்பன் என்று கூறுகிறார்.*

*"இணக்கம் அறிந்து இணங்கு "        (ஆத்திச்சூடி -19)*

*இருவர் நட்பு கொள்ளும் போது வெறும் பகட்டினைக்கொண்டு நட்பு கொள்ளாமல், ஒருவரிடம் வெளிப்படும் பண்புகளை வைத்து அவரிடம் நட்பு கொள்கிற போது அது நல்வழிப்பட்டதாகும் என ஔவையார் பாடல் வழி அறியலாம்.*

*நன்மையைச் செய்து புகழ்பட வாழும் நண்பனை அதே போன்று என்றும் வாழ்க என்று அறிவுரையை எடுத்துரைக்கும் வகையில் சோழன் குளமுற்றத்துச் துஞ்சிய கிள்ளிவளவனுக்கு மாறோக்கத்து நப்பசலையார் கூறிய பாடல் கீழ்வருமாறு,*

*இன்று கண்டாங்குக் காண்குவம் - என்றும்,*
*இன்சொல் என்பதத்தை ஆகுமதி - பெரும*
*ஒரு பிடி படியும் சீறிசம்*
*எளிகளிறு புரக்கும் நாடு கிழவோயோ (புறம் -40 8-11)*

*ஒரு நாள் பழகினாலும் சான்றோர்களாகிய மேன் மக்களின் நட்பானது பெரிய நிலம் பிளக்கும்படி வேரூன்றி நிற்கும் மரத்தைப் போல நிலைத்து நிற்கும் என்பதைக் கீழ்வரும் பாடலடிகள் காட்டுகின்றன.*

*ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை*
*இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே            (வெற்றி வேங்கை 34)*

*"நெங்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்"        (உலகநீதி பாட்டு -2)*

*இப்பாடலில் வருகின்ற நஞ்சுடனே ஒரு நாலும் பழக வேண்டாம் என்ற வரி நட்பினை சுட்டுகின்றது.*

***நட்பின் உண்மை***

*பசிய பொன்னை கூத்தர்க்கு வழங்கியவனும் முந்நீராகிய பசிய பொன்னைக் கூத்தர்க்கு வழங்கியவனும் முந்நீராகிய கடலின் தெய்வத்துக்கு விழா எடுத்தவனுமாகிய நெடியோனால் உண்டாக பெற்ற பஃறுளியாறு நல்ல நீரோசையை அந்த பஃறுளியாற்கு மணலினும் பலகாலம் என் மன்னன் வாழ்வானாக என்று வாழ்த்தும்.*

*"முந்நீர் விழவின் நெடியோன்*
*நல் நீர்ப் பஃறுளிமணலினும் பலவே"  (புறம் 9 : 10-11)*

*என்னும் வரிகளில் நட்பின் உண்மையைச் சுட்டுகின்றது.*

*பசித்தவனுக்கு உணவு கிடைத்தால் அதன் மகிழ்ச்சியைச் சொல்லுதல் அரிது, அதே போன்று மழையில் நனைந்தவனுக்குக் குடை எவரேனும் கொடுத்தால் அதன் நிம்மதி*

*சொல்ல மாளாது. அப்படிப்பட்ட உறவுதான் நட்புறவு என்று பாரதியார் தன் பாடல் வழி அறியலாம்.*

*"மழைக்குக் குடை பசி நேரத்துண வென்றன*

*வாழ்வினுக்கு எங்கள் கண்ணன் (பாரதியார் கண்ணன் பாட்டு -3)*

*மனம் ஒன்றிய நட்பு என்பது புனிதமான உறவு என்பதையும் அதன் பொருளை முழுமையாகப் புரிந்துகொண்டு நல்ல நண்பர்களுடன் பழகும் போது நட்புடையவர்களாக விளங்க முடியும் என்பதைத்தான் மேற்கண்ட புறநானூற்றுப் பாடல்கள் உணர்த்துகின்றன.*

**முடிவுரை**

*புறநானூற்றில் வீரம், கொடை, போர்திறன் சிறப்புகள் பலவாக காணப்படினும் நட்பு இங்கு உயர்வாக காட்டப்படுகிறது. புறநானூற்றில் நட்பின் மாண்புகள் என்னும் கருதுகோள் இங்கு நிறுவப்பட்டுள்ளது. அதியமான் - ஔவையார் இருவரின் சிறப்புக்குறிய உயரிய நெல்லிக்கனியே வழங்கியது நட்பின் உயர்வுதனை காணமுடிகிறது. கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் நட்பின் மாண்பு சிறப்பாக காட்டப்படுகிறது. பொத்தியார் கோப்பெருஞ்சோழன் நட்பு விரிவாக கூறப்பட்டுள்ளது. சங்ககால பேகன் தன் மனைவி கண்ணகியுடன் உயிராக இரு என சுட்டிக்காட்டப்படுகிறது. நட்பு மிகவும் ஆழமாக உயர்படுத்தி கூறப்பட்டுள்ளது. இவ்வாய்வில் உளவியல் முறை ஆய்வு மற்றும் வரலாற்று முறை ஆய்வு முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ஆய்வியலில் மிகுதியாக பயன்படுத்தப்பட்டுள்ளது விளக்கமுறை ஆய்வு முறையாகும். பொது முடிவுகள் அமைவதற்கும், கோட்பாடுகள் அறிந்து கொள்வதற்கும் பயன்படுத்தப்படுவது இம்முறையாகும். நட்பின் இலக்கணம் என்பது அனைவருக்கும் பொது முடிவுகளை பெற உதவுவதால் இங்கு விளக்கவியல் ஆய்வுமுறையும் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.*

**நூற்பட்டியல்**

*1. புலியூர்க் கேசிகன் பதிப்பு 1953*
*புறநானூறு (தெளிவுரை)*
*பாரி நிலையம் , 189, பிராட்வே,*
*சென்னை – 08 (பக்க எண் 140)*

*2. ஞா.மாணிக்கவாசகன் பதிப்பு – 1998*
*புறநானூறு (மூலமும் உறையும்),*
*உமா பதிப்பகம்,*
*மண்ணடி, சென்னை -01 (பக்க எண் 334)*

*3.விளம்பிநாகனார் (பதிப்பு 2005)*
*பதிப்பாசிரியர் : எஸ்.கௌமாரீஸ்வரி*
*நான்மணிக்கடிகை (மூலமும், உறையும்)*
*சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை 14*

*(பக்க எண் -78)*

*4.மு.வரதராசனார் (பதிப்பு – 1949)*
*திருக்குறள் (தெளிவுரை)*
*திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்*
*சென்னை – 18 (பக்க எண் 161)*

*5. ச.வே சுப்ரமணியன் (பதிப்பு -2010)*
*சங்க இலக்கியம் எட்டுத்தொகை (மூலமும், தெளிவுரையும் தொகுதி -3)*
*மணிவாசகர் பதிப்பகம்,*
*சிங்கர் தெரு, பாரிமுனை - சென்னை 8.*

*6. கு.வெ.பாலசுப்ரமணியன்*
*ஆய்வியல் நெறிகள்*
*17ம் பதிப்பு – 2012, அனுராதா பப்ளிகேஷன்ஸ்,*
*கும்பகோணம்*

*7. ஐயன்பெருமாள் கோனர் (பதிப்பு -1988)*
*தமிழ்ச்செல்வம் (தொகுதி – 2)*
*பழனியப்பா பிரதர்ஸ், சென்னை -14 (பக்க எண் - 199)*

*8. . ஐயன்பெருமாள் கோனர் (பதிப்பு -1988)*
*தமிழ்ச்செல்வம் (தொகுதி – 2)*
*பழனியப்பா பிரதர்ஸ், சென்னை -14 (பக்க எண் - 81)*

*9.கீர்த்தி (பதிப்பு -2011)*
*நீதிநூல்கள்,*
*அருணா பப்ளிகேஷன்ஸ்,*
*சென்னை – 49 (பக்க எண் 11)*

*10. கீர்த்தி (பதிப்பு -2011)*
*நீதிநூல்கள்,*
*அருணா பப்ளிகேஷன்ஸ்,*
*சென்னை – 49 (பக்க எண ;91)*

*11. ஐயன்பெருமாள் கோனார் (பதிப்பு -1988)*
*தமிழ்ச்செல்வம் (தொகுதி -1)*
*பழனியப்பா பிரதர்ஸ், சென்னை -14 (பக்க எண் 107)*

*12. இ.சுந்தரமூர்த்தி (பதிப்பு -2000)*
*பாரதியார் கவிதைகள்*
*பாவை பப்ளிகேசன்ஸ், இராயப்பேட்டை, சென்னை 14 (பக்க எண் 223)*

*13. சற்குணவதி (பதிப்பு -2013)*
*தமிழ் இலக்கியங்களில் நட்பு*
*மீரா புத்தகாலயம்*
*பொழிச்சலூர், சென்னை -74*

*14. எஸ்.கௌமாரீஸ்வரி (பதிப்பு -2003)*
*சௌரா தமிழ் அகராதி, சராதா பதிப்பகம்,*
*இராயப்பேட்டை – சென்னை 14*
*(பக்க எண் - 453).*

*15. திருமுருக கிருபானந்த வாரியர் (பதிப்பு -2014)*
*பெரியபுராணம்,*
*குகஸ்ரீ வாரியர் பதிப்பகம்,*
*சிந்தாதிரிப்பேட்டை சென்னை -02*

*16.ச.வே.சுப்ரமணியன்*
*தமிழ் இலக்கிய வரலாறு (பதிப்பு – 1999)*
*மணிவாசர் பதிப்பகம்,*
*பாரிமுனை, சென்னை – 08, (பக்க எண் -555).*